பி, மிபி (ம) சிநலத் (சிந ) துறை

# செய்தி வெளியீடு எண் 664 நாள் 14-08-08

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து 14.8.2008 அன்று மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறி ) அவர்கள் தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1. திரு ந. வாகநேசன், இ.ஆ.ப.,
   செயலாளர்,
   பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

2. திரு பெ.சண்முகம், இ.ஆ.ப.,
   ஆணையர்,
   பிற்படுத்தப்பட்டோர் நலம்.

3. திரு ப. அண்ணாமலை, இ.ஆ.ப.,
   ஆணையர்,
   மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

4. திரு.முகமத் மசூத்,
   அரசு துணைச் செயலர்

5. திரு.கோ.அருணாசலம்,
   அரசு துணைச் செயலர்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கும் 2008–09ம் ஆண்டுக்கான சீருடைகள் 31.8.2008க்குள் வழங்கப்பட்டு விடும் என்று தெரிவிக்கப்பட்டது.

2008–09ஆம் ஆண்டில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் +1 வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள்

வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.7.2008 அன்று தொடங்கி வைத்தார்கள். அதைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இலவச மிதிவண்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் 30.9.2008க்குள் வழங்கி முடிக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

அதேபோல, இத்துறையின்கீழ் வழங்கப்படும் கல்வி உதவித்தொகையைப் பொறுத்தவரை, புதுப்பித்தல் இனங்களுக்கு 15.10.2008க்குள்ளும், புதியஇனங்களுக்கு 15.12.2008க்குள்ளும் உதவித்தொகை வழங்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்படவேண்டிய அனைத்து சலுகைகளும் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே வழங்கப்படவேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையை சுட்டிக்காட்டி அனைத்து அலுவலர்களும் துரிதமாகச் செயல்பட்டு இத்துறை மூலம் வழங்கப்படவேண்டிய அனைத்து சலுகைகளையும் உரிய காலத்தில் வழங்குமாறு அறிவுறுத்தினார்கள்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 31.7.2008 முடிய 4270 பயனாளிகளுக்கு ரூ.981 இலட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளதென்றும், நடப்பாண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கான ரூ.30 கோடியை குறைவின்றி எய்தவேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 31.7.2008 முடிய 1437 பயனாளிகளுக்கு ரூ.322 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதென்றும், நடப்பாண்டில் ரூ. 40 கோடி கடனுதவி வழங்க அறிவுரை வழங்கப்பட்டது.

2008–09ம் ஆண்டுக்கு புதிதாக திறக்கப்படவேண்டிய 25 விடுதிகளுக்கு தகுந்த வாடகைக் கட்டிடங்களைத் தேர்வு செய்து அனைத்து விடுதிகளும் 31.8.2008க்குள் துவங்கப்படவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

அதேபோன்று வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் 25 விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலங்களைத் தேர்வு செய்து பொதுப்பணித்துறையிடம் ஒப்படைத்து கட்டிடப் பணிகளை அவ்வப்போது ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது.

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை 30.9.2008க்குள் நிரப்பிட நடவடிக்கை எடுக்கவும், மாணவர்களின் கல்வித்தரம் மேம்படுவதைக் கண்காணிக்கவும் மாவட்ட வருவாய் அலுவலர் (க.சீ) கேட்டுக்கொள்ளப்பட்டார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் விடுதிகளில் காலியாகவுள்ள காப்பாளர்/ காப்பாளினி, சமையலர், காவலர்/ஏவலர் ஆகிய பணியிடங்களை விரைந்து நிரப்பிட நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

கடந்த ஆண்டுகளில் இலவச மிதிவண்டிகள், சீருடைகள், கல்வி உதவித்தொகைகள் ஆகியவை ஆண்டு இறுதியில் வழங்கப்பட்டது போலன்றி இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து திருப்தி தெரிவித்த அமைச்சர் அவர்கள் துறையின் அனைத்து நலத்திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்த அறிவுறுத்தினார்கள்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.